பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 6 (19—3—68) செவ்வாய் ★ வெளியூர்: பங்குனி 7 (20—3—68) புதன் [இதழ்: 231

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்புப் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஓர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

உச்சவரம்புச் சட்டம் மிச்சவரம்புச் சட்டமானதற்கு காரணம்

காங்கிரசு உறுப்பினர் கேள்விக்கு அண்ணா அளித்த பதில்

புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம்பற்றி அறிவிப்பு

சென்னை, மார்ச் 19—

"முந்திய அரசு நிறைவேற்றிய நில உச்சவரம்புச் சட்டத்தை உணவு அமைச்சர், 'மிச்சவரம்புச் சட்டம்' என்று குறிப்பிட்டாரே அப்படியானால், இப்போது இந்த அரசு அதற்குப் பதிலாக எந்தவிதமான சட்டத்தை இயற்றப்போகிறது? அது எப்படி இருக்கும் என்பதை அமைச்சர் விளக்குவாரா?"

என்று இன்று சட்டமன்றத்தில், காங்கிரசுக் கட்சிக் கொறடா திரு. கே. வினாயகம் கேட்டார்.

இதற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டுப் பதிலளித்ததாவது:—

"இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த காலத்தில், அது, 'உச்சவரம்புச் சட்டமாக இருக்காது; மிச்சவரம்புச் சட்டமாகத்தான் இருக்கும்' என்று நான் கூறினேன். அதைத்தான் நமது உணவு அமைச்சரும் நேற்று இங்கு குறிப்பிட்டார்.

'இன்னின்னது செய்யப்போகிறோம்' என்பதைச் சொல்லிக் கொண்டே நாள் கடத்திக் கொண்டு வந்து, கடைசியில் அந்தச் சட்டத்தை இயற்றியதால்தான் பல தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது; எனவே, இப்போது நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொல்லுவது, பொதுமக்களின் நலனுக்கு உகந்ததல்ல என்பதால் அதைப்பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை."

கப்பலில் போகும் ஊறுகாய் வகைகள்!

கடந்த ஆண்டு மட்டும் இந்தியாவிலிருந்து ரூ. 51-இலட்சம் பெறுமானமுள்ள ஊறுகாய் வகைகள் ஏற்றுமதியாகியுள்ளன.

இதில், பிரிட்டன் பெரும் அளவுக்கு வாங்கியிருக்கிறது. இலண்டனுக்குச் சென்ற ஊறுகாய் வகைகள் மட்டும் ரூ 31,68,538 மதிப்புள்ளவையாகும்.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான 'பப்பட'த்தின் மதிப்பும் சென்ற நாடுகளுமாவன:—

இங்கிலாந்து:	ரூ. 5,72,834.
மலாசியா:	ரூ 5,06,505.
நேபாளம்:	ரூ. 3,83,017.
சிங்கப்பூர்:	ரூ. 1,56,892.

இந்திராவிடம் பேசியது என்ன?

சட்டமன்றக் கேள்விகட்கு அண்ணா பதில்

சென்னை, மார்ச் 19—

"1967 ஆகஸ்டு 24-ம் நாளன்று, மதுரை விமான நிலையத்தில் தலைமை அமைச்சருடன் தமிழக முதலமைச்சர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினாரா? 'ஆம்' எனில், அதன் விவரம் என்ன?" என்று கரு. சீமைச்சாமி (சுத) வி. கே. கோதண்டராமன் ஆகியோர் கேட்டிருந்த கேள்விக்கு இன்று சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"தமிழக முதலமைச்சர் அப்போது மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்ததால், நாகரிகப் பண்பாட்டு அடிப்படையில், தலைமையமைச்சரைச் சந்தித்தார்; ஆனால், முறையான பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை."

இந்தப் பதிலைத் தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"பேச்சுவார்த்தை என்பது, இரு தலைவர்களும் முன்கூட்டி அறிவித்து அதன் பிறகு நடத்துவதாகும். ஒரு தலைமையமைச்சரும்—ஒரு மாநிலத்தின் முதலமைச்சரும் சந்தித்தால், குடும்ப விவகாரம் பற்றிப் பேசமாட்டார்கள்; அரசியல் பற்றிப் பேசியிருப்பார்கள்; ஆனால் இது திட்டமிட்டு நடத்திய பேச்சு அல்ல."

சிந்தன் (காங்):—"தலைமையமைச்சர் தமிழ் நாட்டுக்குச் சுற்றுப்பயணம் வந்தால், முதலமைச்சரோ, பிற அமைச்சர்களோ உடன் வருவது வழக்கம்; இந்த முறை, அப்படி அமைச்சர் யாரும் உடன் வராதது ஏன்?"

அண்ணா:— "இந்த முறை தலைமையமைச்சர் வந்தது, ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக; அதிகாரபூர்வமான சுற்றுப்பயணமாக அல்ல; கோடைக்கானலில் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளத்தான் வந்தார்கள்; ஆகையால் எந்த அமைச்சரும் உடன் வரவில்லை."

"இந்தி மொழிப் பிரச்சினை பற்றி ஏதாவது பேசப்பட்டதா?"

என்ற கேள்விக்கு அண்ணா அவர்கள் பதிலளித்ததாவது:—

"தலைமையமைச்சரும்—முதலமைச்சரும் சந்தித்தால், நாட்டில் அந்த நேரத்தில் நிலவும் சூழ்நிலையையும், அரசியல் முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினையாக உள்ள இந்திப் பிரச்சினையையும் பற்றிப் பேசுவது இயற்கையாகவே நடந்திருக்கும் என்பதை உறுப்பினரே யூகித்துக்கொள்ளலாம்."

விதைப் பண்ணைகள் அதிகரிப்புக்குத் திட்டம்

திருச்சி, மார்ச் 19—

இவ்வாண்டு இறுதியில் தமிழ் நாட்டில் அரசு விதைப் பண்ணைகளின் எண்ணிக்கை, 230 ஆக உயரும். இப்போது 221 பண்ணைகள் உள்ளன.

ஒவ்வொரு விதைப் பண்ணையையும் மேலும் வளர்ச்சியுறச் செய்வதற்கான வழிவகைகள் வகுக்கப்படுகின்றன.

திருச்சி மாவட்டம் குடுமியாமலையில் உள்ள அரசு விவசாயப் பண்ணையும் வேகமாக முன்னேற்றமடைந்து வருகிறது.

அமெரிக்கராகும் இந்தியர்!

அறுபது மடங்கு அதிகரிப்பு

"1965-ம் ஆண்டில் கடைபிடித்ததற்கு மாறாக, அடுத்த ஆண்டில் அமெரிக்கா 6,000 இந்தியருக்குக் குடியுரிமை வழங்க இருக்கிறது"

என்று வாஷிங்டன் நகரத்துச் செய்தியொன்று தெரிவிக்கிறது

இது, அறுபது மடங்கு அதிகரிப்பு ஆகும்!

மாநகராட்சிக்கு ரூ. 47.6 இலட்சம் உதவி

சென்னை, மார்ச் 19—

1967 மார்ச்சிலிருந்து டிசம்பர் 31 முடிய நிறைவேற்றப்பட்டுள்ள தண்ணீர் வழங்குதல்—சாக்கடைத் திட்டங்களுக்காக சென்னை மாநகராட்சிக்குத் தமிழக அரசு ரூ 47,06,574 மானியமாக அனுமதித்திருக்கிறது.

தமிழக மேலவைத் தேர்தல்கள்

கழக வேட்பாளர் விவரம்

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்காகப் பல்வேறு தொகுதிகளிலிருந்தும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களில் கீழ்க்காணும் விவரப்படி தோழர்கள் கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுகிறார்கள்.

அந்தந்தத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்டங்களிலுள்ள கழக அமைப்புகளின் நிர்வாகிகளும், தோழர்களும், நாடாளுமன்ற—சட்டமன்ற—நகராட்சி—உள்ளாட்சி மன்றங்களின் கழகத் தோழர்களும் 8—4—68 அன்று நடைபெறும் தேர்தல்களில் கழக வேட்பாளர்கள் பெருவெற்றிபெறும் வகையில் முனைந்து முயன்று பணியாற்றுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்கள் தொகுதி

சென்னை—செங்கற்பட்டு .... க. அறிவழகன் எம்.ஏ.

பட்டதாரிகள் தொகுதி

கோவை—நீலகிரி—சேலம்—தருமபுரி.... செ. அரங்கநாயகம் எம்.ஏ.பி.டி., பி.எல்.

உள்ளாட்சித் தொகுதி

மதுரை—இராமநாதபுரம் .... பி. திருஞானம்
தஞ்சை .... கோ. சி. மணி
சேலம்—தருமபுரி .... ப. தா. முத்து

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குறிப்பு:—ஆங்காங்கு இணைந்து நிற்கின்ற தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுடைய பெயர் விவரம் பின்னர் வெளியிடப்படும்.

அண்ணா போட்டியின்றித் தேர்வு

மேலவைத் தேர்தலில் அதிகாரபூர்வமான அறிவிப்பு

சென்னை, மார்ச் 18—

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக இன்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அண்ணா அவர்கள் வகித்து வரும் மேலவை உறுப்பினர் பதவி ஏப்ரல் 20-ஆம் நாளுடன் முடிவடைவதால், அப்போது காலியாகும் இடத்திற்குத் தேர்தல் நடைபெற்றது; இதில் வேறு எவரும் போட்டியிடாததால் அண்ணா அவர்கள் வாக்குப் பதிவு நடைபெறாமலே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏற்கனவே அண்ணா அவர்கள் மாநகராட்சிமன்ற உறுப்பினர்களால் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகராட்சியின் பிரதிநிதியாகப் பதவியேற்றார்; இப்போதும் அதே தொகுதியிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இதன்மூலம், ஆறாண்டுக் காலத்துக்கு (அதாவது 1974 ஏப்ரல் 20-வரை) அண்ணா அவர்கள் மேலவை உறுப்பினராகப் பதவி வகிப்பார்கள்.

சிந்திக்க...!

1937-ம் ஆண்டுக் காலத்தில் தனி மனிதர்கள், தங்கள் வாழ்க்கைப் பொருள்களையும், வசதிகளையும் ரூ. 1,500 அளவில் முடித்துக்கொண்டார்கள் என்றால், இப்போது அதே பொருள்களையும், வசதிகளையும் பெறுவதற்கு ரூ. 7,500 செலவழிக்க வேண்டியுள்ளது.

அந்த அளவுக்கு ரூபாயின் மதிப்புத் தேய்ந்துள்ளது!

அதனால்தான் திரு. பூதலிங்கம் தமது பொருளாதார அறிக்கையில், தனி மனிர்களுக்கான வருமான வரி விதிப்புக்கான வருவாய் மட்டத்தை ரூ. 7,500-க்கு உயர்த்துமாறு சொன்னார்!

ஆனால், மொரார்ஜி தேசாய் இதற்கு மறுப்புத் தெரிவித்துக்கொண்டார்!

திரிகுண சென்!

மத்திய கல்வி அமைச்சர் திரிகுண சென் அவர்களைப் பற்றிக் காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருப்பதாக வாரப் பத்திரிகை ஒன்றில் வந்துள்ள துணுக்குச் செய்தியில் எழுதியிருப்பதாவது:—

"அவர் (சென்) நல்ல கருத்துக்களைப் பார்க்கமாட்டேனென்கிறார்! நல்ல கருத்துக்களைப் பேச மாட்டேனென்கிறார்! நல்ல கருத்துக்களைக் கேட்கமாட்டேனென்கிறார்!"

காந்தியடிகளுக்குப் பிடித்தமான மூன்று குரங்குகளைப் பற்றிய வழக்கு பின்வருமாறு:—

"தீயவைகளைப் பாராதே!
தீயவைகளைப் பேசாதே!
தீயவைகளைக் கேளாதே!

காதில் விழுந்தது!

"'சட்டக் கல்லூரி'யைப் பார்த்தாயா?"

"புரிகிறது—நீ எதற்காக இப்படிக் கேட்கிறாய் என்று; 'எங்கள் கட்சிக் கொடியின் வண்ணத்தில் பந்தல் முகப்பில் அலங்காரம் செய்திருக்கிறார்களே' என்று என்னிடம் சொல்லிக் காட்டுவதற்குத்தானே இப்படிக் கேட்கிறாய்?

"ஓகோ, அப்படியா? காங்கிரசுக் கொடியின் வண்ணத்திலா பந்தல் துணியைக் கட்டியிருக்கிறார்கள்? இப்போது நீ சொல்லியதற்குப் பின்புதான் எனக்கு இது தெரியவருகிறது; அது போகட்டும்; நான் உன்னிடம் அதைக் கேட்கவில்லை..."

"பின்...ஓகோ! ஏதோ, 'கலாட்டா, கூச்சல்' என்கிறார்களே—அதையா?"

"அதுவும் இல்லை; 'எனக்கு ஏன் அந்தச் சச்சரவெல்லாம்? அங்கே—சட்டக் கல்லூரியில்—காமராசர் பேசியிருக்கிறாரே -- 'அதைப் பார்த்தாயா? படித்தாயா?' என்றுதான் கேட்க வந்தேன்!"

"கல்லூரியில் பேசுவது போன்று பேசவில்லையே! அதுவும், 'சட்டக் கல்லூரியிலா இதுபோன்றெல்லாம் பேசுவது' என்று கேட்பாய்?"

"அதுவும் தவறு; அந்த அளவுக்குக் காமராசரைப் பற்றிப் புரியாதவன் அல்லன் நான்! அவர் என்ன செய்வார் பாவம்! அங்கே போயும், தி. மு. க.-வைத் தாக்கி 'ஹாஸ்யம்' நிகழ்த்தியிருக்கிறாரே என்பதற்காகக்கூட நான் வருத்தப்படவில்லை!"

"அப்புறம், என்ன தவறும் அவரது பேச்சில்?"

"எல்லாம் உங்கள் கட்சி விவகாரத்தைப்பற்றியதுதான்!"

"என்னப்பா, அடிமடியிலேயே கை வைக்கிறாய்? காமராசர் காங்கிரசுக் கட்சியைப்பற்றித் தவறாகப் பேசினாரா? அதற்கு நீ கவலைப்படுகிறாயா? வேடிக்கையாக இருக்கிறதே!"

"அப்படித்தான் வேடிக்கையாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்—அவர் பேசும் கூட்டத்தில் எழும் சிரிப்பைக் கொண்டு ஆனால், என்ன பேசினார் என்பதை விநயமாகச் சிந்திக்க மாட்டேனென்கிறீர்கள்; சொல்கிறேன் கேள்:—

"சிரமத்தையும் கஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டால், 10 ஆண்டுகளில் ஆட்சி உங்கள் கையில்; இந்தச் சிற்றரசை (தமிழக அரசை)ச் சொல்லுவார்கள்; அந்தப் பெரிய அரசை (மத்திய அரசை)ச் சொல்லுகிறேன்."

இப்படி, கரகோஷம்--சிரிப்பு இரண்டும் குறுக்கிட, சட்டக் கல்லூரியில் பேசியிருக்கிறார் உங்கள் தலைவர்!"

"ஆமாம்; இதில் என்ன தவறு கண்டுபிடித்துவிட்டாய்? நீயும் வரவர தி. மு. கழகத்துக்காரனைப்போல் பேச ஆரம்பித்துவிட்டாய்?"

"நான் சொல்லுவதை, 'தவறு' என்று சொல்லி, காமராசரின் தவறை மறைக்காதே! நீயும் தவறாதே! நான் காங்கிரசுக் காரர்களைப்போல் பேசாதது, கழகத்துக்கு ஆதரவாகப் பேசுவதுபோல் உனக்குத் தெரிகிறது -- வேறொன்றுமில்லை; போகட்டும்! 'காமராசரின் பேச்சில் தவறு என்ன' என்றுதானே கேட்கிறாய்? தவறு மட்டுமல்ல -- விபரீதமே உள்ளடங்கியிருக்கிறது; 'பத்து ஆண்டுகள் கஷ்டப்படுங்கள்: மத்திய அரசு உங்கள் கையில் இருக்குமாறு நான் பார்த்துக்கொள்கிறேன்' என்றார்! ஆமாம்; இப்போது யார் கையில் இருக்கிறதாம்—நீதான் சொல்லேன்!"

"இந்திராவின் கையில்; அதாவது, காங்கிரசின் சார்பாக இந்திராவின் நிர்வாகத்தில்!"

"சரி; அப்படியென்றால், இப்போது காமராசர் பேசியிருப்பதற்கு என்ன அர்த்தம்? மத்திய அரசை இந்திராவிடமிருந்து அபகரிக்கப்போகிறாரா? அல்லது காங்கிரசையே மத்திய அரசின் நிர்வாகத்திலிருந்து அகற்றப்போகிறாரா? அதாவது—தற்கால அகராதிப்படி—கவிழ்க்கப்போகிறாரா?"

"கஷ்டம், கஷ்டம்! கேட்பதற்கே காது கூசுகிறது! ஏன் இப்படியெல்லாம் அவரது பேச்சை 'ஆப்ரேஷன்' செய்து ஆராய்ச்சி செய்கிறாய்?"

பேச்சின் உள்ளே அத்தனை விஷயங்கள் இருக்கின்றன—அதனால்தான்! சீழ் பிடித்த கட்டியை அறுத்துத்தான் குணமாக்க முடியும்; அறுக்காமல் எப்படி ஆற்ற இயலும்? நீதான் சிந்தித்துப்பாரேன்—காமராசர் ஏன் இப்படிப் பேசவேண்டும்?"

"மாணவர்களுக்கு ஓர் உற்சாகம் கொடுப்பதற்குத்தான்; இதில் என்ன தவறு இருக்கிறது?"

"மாணவர்கள் கூட்டத்தில் என்ன பேசுவார்கள்?—'நீங்களெல்லாம் எதிர்காலத் தலைவர்கள்; இந்நாட்டு மன்னர்கள்; எதிர்காலத்தில் அமைச்சர்களாக வருபவர்கள் உங்களிடையிலே இருக்கலாம்; அரசியல்வாதிகள் உருவாகலாம்'—இப்படித்தானே பேசுவது வழக்கம்; 'கஷ்டம் பார்க்காமல் பத்து வருடம் உழையுங்கள்; 'அங்கே' உள்ள அரசு உங்கள் கையில்; அதற்கு நான் பொறுப்பு' என்ற கருத்தில் அல்லவா பேசியிருக்கிறார் உங்கள் காமராசர்? பத்து ஆண்டுகள் யார் தலைமையில் உழைக்கச் சொல்கிறார்? 'மத்திய அரசைப் பிடித்து எங்கள் கையில் கொடுங்கள்' என்று எந்த மாணவர் இவரிடம் வந்து கேட்டார்? அப்படியே பார்த்தாலும் இப்போது மத்திய அரசு இருப்பது உங்கள் கட்சியின் கையில்தானே? அதைப் 'பிடித்து' வந்து ஏன் மாணவர்களிடம் தருகிறேன் என்கிறார்? ஒருவேளை 'இந்திராவின் கையிலிருந்து தட்டிவிடுவேன்' என்பதற்கான சூட்சமமான அறிவிப்பா இது? அல்லது, 'இதோ பார்; மாணவர்கள் என் கையில்; அகற்றிவிடுவேன் மத்திய ஆட்சியை' என்பதற்கான சூட்சமமான அறிவிப்பா இது? அதற்கு, ஏற்கனவே பிரிந்து பிளவுபட்டிருக்கும் அனைத்திந்தியக் காங்கிரசிலேயே 'ஆள்' கிடைப்பார்களே? மாணவர்கள் மத்தியில் வந்தது எதற்கு இந்தச் 'சாணக்கியம்?' காங்கிரசு, எதிர்க் கட்சி ஆட்சிகளைக் கவிழ்க்க முனைவதாகத்தான் படிக்கிறேன்; ஆனால், காமராசரே மத்திய ஆட்சியைக் 'கவிழ்ப்பது' பற்றிப் பேசியிருக்கும் இதுதான் விசேடச் செய்தி!"

"அப்பப்பா! காது கொடுத்துக் கேட்க முடியவில்லை! அவர் எதை நினைத்து இப்படிப் பேசினாரோ—நீ ஏன் இப்படியெல்லாம் 'கலர்' கொடுத்து விமர்சிக்கிறாய்? உன்னைப்போல் நடுநிலையாக உள்ளவர்களே இப்படியெல்லாம் பேசினால், அப்புறம் அந்த தி. மு. கழகத்துக்காரர்கள் எப்படியெல்லாமோ பேசுவார்களே?"

அவர்கள் ஏன் எப்படியெல்லாமோ பேச வேண்டும்? காமராசர் பத்து ஆண்டுகளில் பிடிக்கப்போவதாகப் பேசியிருப்பது, 'அங்கே' உள்ள மத்திய ஆட்சியைத்தானே! போகட்டும்! 'ஒரு தமிழர் மத்திய ஆட்சியைப் பிடித்த பின்னராவது இந்த மாநிலத்துக்கு இன்னும் ஏதாவது வசதி கிடைக்கிறதா' என்ற 'ஆசை'தான் கழகத்துக்காரர்களுக்கு இருக்கும்; ஆனால், காமராசரது இந்தப் பேச்சு கலக்கப்போவது புதுடில்லியைத்தான்! 'மத்திய புலன் விசாரணைத் துறை' என்று ஒன்று இருக்கிறது தெரியுமா?"

"ஆமாம்; ஏன் கேட்கிறாய்?"

"பிரிவினைத் தடைச் சட்டம்போல் இப்போது புதிதாக ஒரு தடைச் சட்டம் வந்திருக்கிறதே—தெரியுமா?"

"அதுவும் தெரியும்; இத்தனையையும் சொல்லிவிட்டு, ஏன் இந்த விபரீதக் கேள்விகளையும் கேட்கிறாய்? பயமாக இருக்கிறதப்பா, உன் கேள்விகள்!"

"நீ பயப்படாதே! பயப்படவேண்டியவர் காமராசர்! ஆனாலும், அவருக்கும் முன்பாக அவரது பேச்சு புதுடில்லிக்குத்தான் பயத்தைக் கொடுத்திருக்கும்!"

"அது போகட்டும்; மத்தியப் புலன் விசாரணை—சட்ட விரோதச் செயல் தடுப்புச் சட்டம்—என்று, ஏதோ இரண்டைச் சொன்னாயே, அது ஏன்?"

"ஒன்றுமில்லை; பயப்படவேண்டாம்; காமராசரது பேச்சு, மத்தியப் புலன் விசாரணைத் துறைமூலம் புதுடில்லிக்குப் போயிருக்கும்! அவர்கள் கருத்துப்படி, காமராசரது பேச்சு, 'சட்ட விரோதச் செயல், தடுப்புச் சட்டத்துக்கு எதிரானது' என்று முத்திரை குத்தப்படும்....."

"கொஞ்சம் நின்று, சற்று விளக்கமாகக் கூறிவிட்டுப் போயேன்...உன்னைத்தானே...பயமாக இருக்கிறது...சரியாக... விளக்கமாகச் சொல்லப்பா...போய்விட்டாயா அதற்குள்... இப்போது என்ன செய்வது...இந்தத் தலைவர் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாரோ!"

'மீண்டும் ஒரு போராட்டத்துக்கு வழிவகுக்க வேண்டாம்!'

'கல்லக்குடி' என்ற பெயர் சூட்ட ஏன் முட்டுக்கட்டை?'

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் மாயவன் எச்சரிக்கை

நாடாளுமன்ற மக்களவையில், இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கழக உறுப்பினர் மாயவன் கலந்துகொண்டு ஆற்றிய கருத்துரையில், 'டால்மியாபுரம்' என்னும் இரயில் நிலையத்தின் பெயரை 'கல்லக்குடி' என மாற்ற மத்திய அரசு மறுத்துவருவதையும் அதற்குக் கூறிவரும் சாக்குப் போக்குகளையும் கண்டித்தார்; 'மீண்டும் ஒரு போராட்டத்துக்கு வழிவகுக்க வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்தார்; அவர் பேசியதாவது:—

ஏப்ரல் 9-ந் தேதியிலிருந்து தூங்கும் வசதியுள்ள பெட்டிகளில் 'பெர்த்'களுக்குக் கட்டணம் கூட்டப்பட்டிருக்கிறது; அது இரண்டடுக்குக்கா — மூன்றடுக்குக்கா என்பது தெரியவில்லை. இரண்டடுக்கு—மூன்றடுக்கு இரண்டையும் சரிசமமாகக் கருதி ஒரே கட்டணம் விதித்திருக்கிறார் இரயில்வே அமைச்சர்; இதுதான் காங்கிரசின் சமதர்மம்!

நிவாரணங்கள் தருவதில் சரிசமம் இல்லை; ஆனால் சுமையை ஏற்றுவதில் சரிசமமாக இருக்கிறார்! இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் தென்னாட்டவர்தான்!

இந்தியாவின் தலைநகரம் நாட்டின் வடகோடியில் இருப்பதால் தெற்கேயிருந்து ஒரு சின்ன காரியமாக டெல்லி வருகிறவர்கள்கூட, தமிழராயிருந்தால் ரூ. 8-ம், கேரளராயிருந்தால் ரூ. 12-ம் அதிகம் கட்டணம் தர வேண்டும்...

இரயில்வே அமைச்சர்:—"மைசூர்க்காரரும், அசாமியரும்கூடத்தான்."

மாயவன்:—"பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தை ஈடுகட்ட—வருவாயைக் கூட்ட அமைச்சர் படும் கவலை எனக்குப் புரிகிறது.

புரியாத தத்துவங்களை பேசுவோர் ஆட்சியில்!

சனநாயக சோஷலிசம்—சோஷலிச மாதிரி சமுதாயம் என்றெல்லாம் தங்களுக்கே புரியாத தத்துவங்களைப் பேசும் காங்கிரசாரின் ஆட்சியில் ஏற்றப்படுகிற வரிச் சுமை, நாட்டின் எல்லாப் பகுதி குடிமக்களையும் சரிசமமாகப் பாதிக்கிற அளவில் அமையவேண்டும்; ஆனால் அவர்கள், சோஷலிசத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, 'மாதிரி'யை மட்டும் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அந்த அழகையெல்லாம் அமைச்சர் காணட்டுமே!

இரயில் வண்டிகளில் எப்படி உணவு பரிமாறப்படுகிறது என்ற அழகைப் பார்க்க, நம்முடைய இரயில்வே அமைச்சர் மூன்றடுக்குத் தூங்கும் வசதிப் பெட்டியில் ஒரு முறை பயணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

மூடப்படாமல் உணவு எப்படிக் கொண்டுவரப்படுகிறது—உணவு நிரம்பிய தட்டுகள், சீறுநீர் கழிக்குமிடம்—கையலம்பும் இடங்களின் அருகிலே அப்படியே திறந்து வைக்கப்பட்டு, அங்கிருந்து பயணிகளுக்கு எப்படிப் பரிமாறப்படுகின்றன என்ற அழகையெல்லாம் அவர் பார்க்கலாம்!

உணவு பரிமாறுவோரின் வசதிக்கேற்ப பயணிகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது. மாலை 5-30 மணிக்குத்ததான் மாலைநேரச் சிற்றுண்டியும் காபியும் தரப்படுகிறதென்றால், உடனே ஒரு மணி நேரத்திற்கெல்லாம்—மாலை 6-30 மணிக்கு இரவுச் சாப்பாடு பரிமாறப்படுகிறது!

இரயில்வேத் துறையின்மூலம் உணவு பரிமாறப்படும் முறையில் பெருத்த முன்னேற்றம் தேவை என்பதை அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவின் அளவும் தரமும் அதிகமாக வேண்டும்.

முழுக் கோப்பைக்குக் காசு வாங்கிக்கொண்டு அரைக் கோப்பைத் தேநீர்தான் தருகிறார்கள்!

ஓர் இரயில் நிலையத்தில் நான் கால் லிட்டர் பால் வாங்கினேன்; என்னிடம் கால் லிட்டர் காலி புட்டி இருந்தது; அதில் தான் பால் வாங்கினேன்; சொன்னால் நம்புங்கள்—நான் வாங்கிய கால் லிட்டர் பால், அந்தக் கால் லிட்டர் புட்டியில் பாதிதான் இருந்தது!

எனக்கோ, இந்தி தெரியாது! எனவே, அவனிடம் வாதிட முடியாமல் வாளாவிருந்தேன்! 'இந்தியா வளருகிற நாடு; டில்லியை விட்டு நாம் புறப்பட்டதுமே இந்தப் புட்டியும் வளரத் தொடங்கிவிட்டதோ' என்று என்னை நானே தேற்றிக்கொண்டேன்!

பகுதி பகுதியாகப் பிரித்து வைக்க அமைச்சர் முயலுகிறாரா?

அங்கீகரிக்கப்பட்ட நாடக—நாட்டியக் குழுக்களுக்குக் கட்டணச் சலுகைகள் தரப்படவேண்டும்.

நேரம் காலமில்லாமல் எப்போது பார்த்தாலும் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இந்த அரசு, கலைஞர்கள் - நடிகர்கள் ஆகியோர் எந்த இடர்ப்பாடுமின்றி நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வருவதில் அக்கறை காட்டவேண்டும்.

தமிழகத்திலிருந்து ஒரு நாடகக் குழுவோ, கேரளத்திலிருந்து ஒரு 'கதக்களி'க் குழுவோ வடநாடு வரவேண்டுமென்றால், முழுக் கட்டணம் செலுத்தித்தான் வரவேண்டுமென்று இரயில்வே அமைச்சர் எதிர்பார்க்கிறாரா? அப்படி ஏன் அவர்கள் வரப்போகிறார்கள்? அதேபோல கலிங்கத்து நாட்டியக் குழுவோ, வங்காளத்து நாடக மன்றமோ தென்னாட்டுக்குப் போகமாட்டார்கள்!

கலாசார அடிப்படையில் மக்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து வைக்க இரயில்வே அமைச்சர் எண்ணுகிறார் போலும்! எனவே மீண்டும் கலைஞர்களுக்கு உள்ள கட்டணச் சலுகையை வழங்கிட வேண்டுகிறேன்.

சிக்கனச் சீரமைப்புக்கு இடங்களா இல்லை?

அடுத்து, இலாபம் வராத இரயில் பாதைகளை மூடிவிடும் வகையில் ஏன் இரயில்வேத் துறை சிந்திக்கிறதோ தெரியவில்லை!

இதன் விளைவாய் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்கள் எவ்வளவு அவதிக்கு ஆளாவர் என்பதை எண்ணிப் பார்க்கிற போது, சிக்கனத்தின் பேரால் இந்த நடவடிக்கை எடுப்பதில் பொருளே இல்லை!

சிக்கனப்படுத்த இடமா இல்லை? அரசாங்கத்தின் அர்த்தமற்ற செலவுகளாலும், திட்டங்களைத் தவறாகச் செயல்படுத்துவதாலும் தொகை தொகையாய்ப் பணம் பாழாவதை அன்றாடம் பார்க்கிறோம்!

ஜீப் ஊழல்—டிரக் டயர் ஊழல்—அமின்சந்த் பியாரிலால் தமாஷா—என்று ஆயிரக்கணக்கான ஊழல் தொடர்களை நாம் அறிவோமே!

பொருந்தா வாதத்தால் பலனேதும் இல்லை!

'டால்மியாபுரம்' என்ற இரயில் நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றியாக வேண்டும்.

ஏற்கனவே, 'கள்ளிகுடி' என்றொரு நிலையம் இருப்பதைச் சுட்டிக்காட்டுவது பொருந்தாத வாதம் ஆகும்!

(3-ம் பக்கம் பார்க்க)

நிதி நெருக்கடி நிலையிலும் திறம்பட இயங்கும் உள்ளாட்சி மன்றங்கள்

வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வழிமுறைகளில் காட்டிடும் ஆர்வம்!

ஓராண்டு அனுபவத்தில் கண்ட உண்மை---அமைச்சர் முத்துசாமி விளக்கம்

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், தமது துறையின் மானியக் கோரிக்கையை முன்வைத்துச் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :—

நாம் செய்யவேண்டிய வேலைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கின்றன; இதற்கு வேண்டிய நிதி வசதி அதே அளவில் பெருகாதலும், நம் திட்டங்கள் சில பாதிக்கப் படுகின்றன.

மாநில அரசுக்கு மைய அரசின் உதவி ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது; இத்தருணத்தில், ஜனரட்சிகிறு வளங்கள் தங்கள் நிதிப் பெருக்கத்திற்கான வழிவகைகளே ஆராய்ந்து கருத்தூன்றிச் செயல் படவேண்டும்.

வருமானத்தைப் பெருக்கும் திட்டங்களை ஜனரட்சிகள் அமைத்து நிதிப் பற்றாக்குறையை நீக்க வழிமுறை காணவேண்டும். இப் பணியில் பொதுமக்கள் பெரிதும் தூண்டுதலாக இருப்பார்களென்று நம்புகிறேன்.

நகராட்சி வரவு - செலவு

தமிழகத்தில் இன்று 88 நகராட்சி மன்றங்களின் மொத்த வருமானம் 1965—66-ம் ஆண்டுக் கணக்குகளின்படி ரூ. 12½ கோடி. அளவில் உயர்ந்துள்ளது. வீட்டு வரி ரூ. 4½ கோடி.; கேளிக்கை வரி வகையில் ரூ. 2 கோடி.; நாளங்காடி, பேருந்து நிலையம் முதலான பயனீட்டுத் துறையில் ரூ. 1½ கோடி.; முத்திரை விற்பனை வகையில் ரூ. 50 இலட்சம்; தண்ணீர் முழாய் வரவு ரூ 50 இலட்சம்; தொழில் வரி ரூ 25 இலட்சம்; ஏனைய வரவுத் தலைகளில் ரூ. 1 கோடி; இத்துடன், இம்மானில அரசு மானியம் கடன்மூலம் ரூ 2 கோடி அளவில் கொடுத்துள்ளது.

மேற்கண்ட வரவிலிருந்து நகராட்சித் துறையில் நடைமுறை அளவில் ரூ. 9½ கோடியும், முடிக்கப்பட்டுச் செயல்களில் ரூ 3கோடியும் செலவாகியுள்ளது.

நடைமுறை இனங்களில் ஆரம்பப் பளளிக்கு ரூ. 130 இலட்சம்; உயர்நிலைப் பளளிக்கு ரூ. 80 இலட்சம்; பொதுநலத் துறைக்கு ரூ. 2½ கோடி.; குடிநீர் வடிகால் துறையில் ரூ. 1½ கோடி.; போக்குவரத்துப் பணிக்கு ரூ 80 இலட்சம்; பயனீட்டுத் துறைகளுக்கு ரூ. 40 இலட்சம்; தெருவிளக்கு ரூ. 40 இலட்சம்; நகரமைப்புத் துறைக்கு ரூ. 20 இலட்சம் ஆகும் — மொத்தம் செலவு ரூ. 12½ கோடியாக உயர்ந்துள்ளது.

பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளாட்சி மன்றங்கள் அவற்றும் நிதி நிலைமைக்கேற்பத் தம் பணிகளைத் திறம்படச் செய்வாற்றி வருகின்றன. இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் பலப் பல. இவற்றைச் செயல்படுத்த வேண்டுமாஞல் நிதி வசதி பெருக வேண்டியது தவிர்க்க முடியாது.

குடிதண்ணீர், வடிகால் துறைகளில் மானியம் வழியாக மற்ற ஆட்சித் துறைகளுக்கு அளித்துள்ள சலுகைகளை நகராட்சிகளுக்கும் அளிக்க மைய அரசு ஒப்புக்கொண்டால் நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை குறிப்பாக முன்னேற்றமடையும் என்பது என் கருத்து.

நீர் வழங்கல், வடிகால் முதலான வற்றை முன்னிட்டுச் சென்னை மாகராட்சிக்கு 1967 -68 இறுதி வரையில் மைய அரசினின் உடைமையிலிருந்து பணிக் கட்டணமாக ரூ. 25 இலட்சம் வர வேண்டியுள்ளது; இதைக் கொடுக்குமாறு மாகநராட்சி பலமுறை வேண்டியும் பய னில்லை. மாகநராட்சியின் சார்பில் தமிழ்ந அரசு மைய அரசின் பணிகள், வீட்டு வசதி வழங்கல் அமைச்சகத்திற்கு இது பற்றி கோடிலாக்கை கடிதம் எழுதித் தூதரிப்படுத்த வேண்டியுள்ளது.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்புகொள்ளத் தொடங்கிய பின் கடந்த ஓராண்டில் பல நகராட்சிளின் வேண்முறைகளைக் கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது.

நாளங்காடிகள், பேருந்துநிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிளில் பல நகராட்சின்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன; இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைகிறேன்."

★

உள்ளாட்சி மன்றங்கள் ஆற்றிவரும் கல்விப் பணி

"ஆரம்பக் கல்வியைப் பரப்புவது ஜனரட்சி ஒன்றியங்களின் மேற் கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிகப் பெரியதாகும்.

ஆரம்பக் கல்விக்காக ரூ 2.274 இலட்சம் இவ்வாண்டில் ஒதுக் கப்பட்டிருக்கிறது; ஜனரட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவு செய்யப் படும் தொகை யில் இது 43 சதவீதமாகும்.

இத்துறையில் 23,000 ஆரம்பப் பள்ளிளும், 4,300 உயர் தொடக்கப் பள்ளிகளும், உள்ளன; இவற்றுள் 11,000 பள்ளி களுக்கு மட்டுமே கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இன்று தமிழகத்தில் 87 இலட்சம் சிறுகளுக்கு 1,14,600 ஆசிரி யர்கள் ஜனரட்சிப் பள்ளிகளில் அறிவூட்டி வருகின்றனர்.

தரமான கல்வியைப் பரப்பும் வகையில் பல மனியத் திட்டங் கள் ஜனரட்சிப் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ஜனரட்சிகள், ஜனரட்சி ஒன்றி யங்கள் அமைச்சப்பட்டதலுல் நண்பகல் உணவுத் திட்டத் தைச் செவனே நிறைவேற்று வதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

1957—58-ம் ஆண்டில் தொடக் கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் உனவு வழங்கப்படும் சிறுர் களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் உயர்ந்து வருகின்றது. அரிசனநலப் பள்ளிகள், சென்னை மாகநராட்சிப் பள்ளி கள் உட்பட 30,000 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வரு கின்றது. இப்பள்ளிகளில் 18.27 இலட்சம் பிள்ளைகள் கண் பகல் உனவு பெறுகின்றனர்.

மெருமளவில் முதன் முதலாக ரூ. 7.30 இலட்சம் இப்பள்ளி களுக்குத் தளவாட மானியமாக 1967—68-ம் ஆண்டில் கொடுக் கப்பட்டுள்ளது. இம்மானியம், தொடக்கப்பள்ளி ஒன்றிற்கு ரூ 800 வீதமும், உயர் தொடக் கப் பள்ளி ஒன்றிற்கு ரூ. 1,000 வீதமும் அளிக்கப்படும். இதன் மூலம் 1,122 தொடக்கப் பள்ளி களும், 334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன்பெறும்.

ஆண்டுதோறும் வழக்கமாகச் சமுதாய வளர்ச்சி நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடங்கட்கென ஒதுக் கப்படும் தொகையைத் தவிர இவ்வாண்டில் கல்வி மானியத்தி லிருந்து பள்ளிக் கட்டிடங்கள்,

விலையகம்

எந்த ஓட்டலில் சாப்பிடுகிறார்?

சட்டமன்றத்தில் நகைச்சுவைக் கேள்வி - பதிலிகள்

சென்னை, மார்ச் 18—சட்டமன்றத்தில், ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலை பற்றிய கேள்விகள் கேட்கப்பட்ட நேரத்தில், சுதந்திராக் கட்சி உறுப்பினர் எழுந்து, அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் திரு. கே. விஜயகுமார் சுட்டிக்காட்டி, 'திரு. விஜயகும் எந்த ஓட்டலில் சாப்பிடுகிறார் என்பதை அறியலாமா?' எனறு கேட்டார். (சிரிப்பு)

'தமக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் திரு. விஜயகுத்திடமே கனம் உறுப்பினர் கேட்டு அறிந்து கொள்ளலாம்' என்றார் உனவு அமைச்சர் திரு கே. மதியழகன்.

கே. விஜயகம் :— "உனவு அமைச்சர் சாப்பிடும் ஓட்டலில் தான் நானும் சாப்பிடுறேன்."

(சிரிப்பு)

அறிஞர் அண்ணு :— "உல்பருமனுக்கு இருப்பவர்கள் அதிகம் சாப்பிடக்கூடியவர்கள் என்பது தவறான கருத்து; உறுப்பினர் ஜராமூர்த்தி, சிங்கள் போன்ற வர்கள் ஒல்லியாக இருப்பவர் கள்) நான் அதிகமாகச் சாப் பிடக்கூடியவர்கள்."

ஜராமூர்த்தி :—"என்மீது முதலமைச்சர் அபாண்டமாகக் குற்றஞ்சாட்டுகிறர். இதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளலாமா?" (சிரிப்பு)

அண்ணு :— "அதிகம் சாப்பிடுவது என்பது குற்றமல்ல."

(மேலும் சிரிப்பு)

'கலைஞர் குறளகம்'

"பொதுப் பணி அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 18—9—67 அன்று எனது புதிய மனியைத் திறந்துவைத்து 'குறளகம்' என்று அதற்குப் பெயர் சூட்டி னார்; ஆனால், 14—1—68-ல் அறி ஞர் அண்ணு அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கதர்—கைத் தொழில் அங்காடிக்குக் 'குறளகம்' என்ற பெயர் சூட்டப்பட்டதால், எனது இல்லத்தின் பெயரை, 'கலைஞர் குறளகம்' என்று மாற் றிக்கொண்டேன்" என்று இரய புரம் கமகத் தோழர் என். எஸ். இராசு அறிவித்தார்.

திருமதி யூ. ஆர். சீவரத்தினம்

கலை நிகழ்ச்சிகள்

மார்ச் 19: அரியூர்; 24: திண்டுக்கல்; ஏப். 7: இராமாதபுரம்; 14: தூத்துக்குடி.

முகவரி:

திருமதி யூ ஆர். சீவரத்தினம், 31, போயஸ் சாலை, தேனும்பேட்டை, சென்னை-18.

ஆசிரியை குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும், தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கும் ரு 27.65 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளன. இங்கிறியைச் செய்வனே பயன்பெறும் தமவட்ட ஆட்சித் தலைவர்கள், ஜனரட்சி ஒன்றிய ஆணையர்கள் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

ஜனரட்சி ஒன்றியப் பள்ளிகளில் கல்வித் திட்டங்கள் நிறைவு பெற ஆவன செய்யவேண்டி துவக்கப்பட்ட கல்விப் பிரிவு இதற்கான வழிவகைகள் செய்து வருகிறது.

எண்ணற்ற தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன னனும் கிலஞானத்தால்—பரக் கிரமத்தால் — அன்பால்—உன் னத இமயமலே போல் ஓங்கிடும் சீர்த்தியெய்தி இன்புற்று வாழும் நிலே விரைவில் மலரக் கல்வி வளர்ச்சியை மேலும் வளப் படுத்துவோமாக!"

நாடாளுமன்றத்தில் மாயவன் பேச்சு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே போன்ற — கிட்டத்தட்ட ஒரே ஒலிப்புள்ள ஊர்ப் பெயர் கள் உள்ள இரயில் நிலையங்கள் இருப்பது அமைச்சருக்குத் தெரி யாது போலும்!

என்ன தொடர்பே--- எனக்குப் புரியவில்லே?

அத்தகு, குறைந்த பட்ச இரயில் கட்டணத்துக்கும், ரோப்பாரம் ரு முலுக்கு கட்டணத்துக்கும் என்ன தொடர்பே எனக்குப் புரியவில்லே; அதை உயர்த்தக் கூடாது.

பிறகு விமானத்துறை அமைச்சர், விமானங்களே நமமுலுக்கட்டண மாகக் குறைந்தபட்ச விமானக் கட்டணத்தை வருவிக்க முற்படு வார்!

அமைச்சரின் கூற்று அதிர்ச்சி தருகிறது!

இரயிலில செல்லும் சரக்குகள் இலட்சக்கணக்கில் ஆண்டு தோறும் களவு போகின்றன.

ஒரு இரயில்வே அதிகாரியை ஒரு செய்தியாளர் இதுபற்றிக் கேட்டபோது, 'அன்ருட நட வடிக்கையாக இருக்கையில், இது எப்படி செய்திபாகும்' என்றாராம் அவர்!

இப்படிப்பட்ட பேச்சுகளைக் கேட் கவும், செய்தியோ காளிதழ் களில் பார்க்கவும் அதிர்ச்சி தான் ஏற்படுகிறது!

காரணங்கள் பல உண்டு!

இரயிலில சரக்கேற்றிச் செல்வது குறைந்திருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. இடையிலே சரக்குக் களவு போவது— அளவு மீறிய கட்டுப்பாடுகள், தடைகள்—தாமதாகச் சரக்கு கள் போய்ச் சேர்தல் ஆகியவை சில காரணங்கள்.

டெடுஞ்சாலப் போக்குவரத்து தோடு இரயில்கள் போட்டி போட முடியவில்லே! டெடுஞ் சாலைகளில் சரக்கேற்றிச் செல் லும் வாரின், சரக்கேற்றிச் செலவும் இரயில்களிலிட மிக விரைவாகச் செல்கின்றன!

பயனிகள்கூட இரயிலில் பயனம் செய்வதையிட்ட பேருந்துகளில் பயனம் செய்வதையே பெரிதும் விரும்புகிறார்கள்; ஏனென்றல், பேருந்துகளில் கெரிசல் இல்லே; கட்டணம் குறைவு; நேரத்தில் சரியாகச் செலவின்றன.

எனவே, இரயில்வே கட்டணம் கட்டப்பட்டுக்கூடாது என்று வற் புறுத்த விரும்புகிறேன்.

பாதிக்கப்படுவோர் யார்?

ஒவ்வொரு வரவு-செலவுத் திட் டத்திலும் இது வாடிக்கையாகி விட்டிருக்கிறது! முன்பு தசம நானய முறை வழக்கில் வந்த போது கட்டணங்கள் உயர்த்தப் பட்டன; அடுத்து நானய மதிப் புக் குறைப்பின்போது ஒரு முறை; பிறகு பாகிஸ்தான்— சீன படையெடுப்போது ஒரு உயர்வு; இப்போது, இனனம் ஒரு கட்டனத்தை உயர்த்து வதா?

இதனுல் ஏழைகளும், வாழ்வின் தரமுயர்வில் உள்ளவர்கள் மட் டுமே பாதிக்கப்படுகிறார்கள்!

இந்திய விடுதலேக்குப் பின்னுல் இரயிலில் கட்டனங்கள் நேரட் டிப்பாகப்பட்டு விட்டன!

சட்டத்தில் இருக்கிறது- நடைமுறையில் காணுமே!

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை களைப் பேண அரசியல சட்டத் தில் விதிகள் இருக்கின்றன; இருந்தாலும், வேறு வார்ப் கள், பதவி உயர்வுகளில் இவற்றை யாரும் கடைப்பிடிப் பதே இல்லே.

எனவே, அரசியல சட்ட விதி களின்படி தாழ்த்தப்பட்ட மக் களுக்குச் சலுகைகள் வழங்கும் வகையில் ஜெனரல்-மனேஜர்

போன்ற அதிகாரிகளுக்கு குறிப் புரை வழங்கிட வேண்டுகிறேன்.

குற்றஞ்சாட்டுவதில் பொருள் என்ன உண்டு?

மத்திய அரசின் உடைமைகளைப் பாதுகாப்பதில் மாலை அரசு களும் ஒத்துழைக்க வேண்டு மென்று அமைச்சர் குறிப்பிட் டார். இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

தெற்கே நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் இர யில் வே உடைமைகளுக்குச் கொஞ்சம் சேதம் ஏற்படாமலில்லே; ஆனுல் அதற்காக, தமிழ கத்தில் உள்ள தி-மு-க. அர சைக் குற்றஞ் சாட்டுவதில் பொருளும் இல்லே — அது பொருத்தமும் ஆகாது!

எங்கள் முதலமைச்சர் அண்ணு அவர்களும், தமிழக அரசும் எடுத்துக்கொண்ட முயற்சி களாலேதான் அந்தக் கிளர்ச்சி தணிந்தது!

இந்தி எதிர்ப்புணர்வால் கிளர்ச் தெழுந்து மக்கள் நிரண் டெழுந்த இடத்திற்கே தம உலேரையும் பொருட்படுத்தாமல் சென்று, மக்களே அமைதிப் படுத்தினரே எங்கள் மாநில அமைச்சர் திரு. கருணுகிதி!

பாதிக்கப்படுவது யார்?

மூன்றும் வகுப்புப் பயனிகள் தான் எப்போதும் மிகுந்த தொல்லேக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு வசதிகள் பெருக் கப்பட வேண்டும், அதிக வண்டிகள் விட்டு முன்றும் வகுப் பில் உள்ள நெரிசலே நீக்கியாக வேண்டும்.

இரயில் வண்டியையே நம்பி இருக்கும் நடுத்தர—கடைநில மக்கள்தான் இந்த வரவு-செல வுத் திட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்!

இரயில் கட்டன உயர்வு, வணி கர்கள் தங்கள் பண்டங்களின் விலேயை உயர்த்திட உதவும் தூண்டுகோல்!

வருவாய் குறைவதற்கு வழி வகுக்காதீர்!

சிக்கனத்தின் பேரால் டிக்கெட் பரிசோதகர்களேக் குறைத்திரு பதாகத் தெரிகிறது. மாருக, நாட்டின் எல்லாப் பகுதியிலும் டிக்கெட்டில்லாப் பயணத்தை அறவே தடுக்கும் வகையில் டிக் கெட் பரிசோதகர்கள் எண் ணிக்கையைக் கூட்டியாக வேண்டும். இல்லாவிட்டால், 'சிக்கனம் என்ற பேரால் இரயில் வேயின் வருவாய் குறைந்து போகும்."

'அண்ணு புகழ் நானூறு'

வேண்டுகோள்

'அண்ணு புகழ் நானூறு' தொகுப்பாசிரியர் புலவர் அமிழ்தெனனகன் அறிவித்துக் கொள் வது :—

"'புகழ் நானூறு' வெளியீட்டுப் பணி தொடர்ந்து சிறப்புற நடைபெற்று வருகிறது. படல் அனுப்ப ஒப்புதல் அளித்தவர் களும், புதியவர்களும் காலக்தாழ்த் தாது இத்திங்கள் இறுதிக்குள் பாடல்களே அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

30 வரிகளுக்குள், அகவற்பா வில், திண—துறைகளோடு தலேப் புடன் பாடல் அமைதல் வேண் டும்.

முகவரி :—தொகுப்பாசிரியர், 'அண்ணு புகழ் நானூறு', 86, நெரு வீதி, புதுச்சேரி—1.

முகவரி

செ. யூசுப்,
சின்னப்பள்ளித் தெரு,
தோப்புத்துறை,
தஞ்சை மாவட்டம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20--3--68

சென்னை 72-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு நாகப்பய்யர் தெருவில் ; தலைவர் : சி. கார்மேகம் ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் எம்.எல்.சி., சி. சிட்டிபாபு எம்.பி., இளம்பரிதி, எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி., பி. ஆர். காசரசன் எம்.சி., கே. சுப்பிரமணியம் எம்.சி., பி. எம். துளசிங்கம், எம். துரைவேலு, மற்றும் பலர்.

சென்னை 4-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு சேலையப்பன் தெருவில் ; தலைவர் : கே. முத்து ; பேசுவோர் : எம். இராசாங்கம் எம்.எல்.ஏ., ஆடிட்டர் எம். எம். எல். ஏ., இளம்பரிதி, மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. கே. மூர்த்தி, கே. எம். கண்ணபிரான்.

சென்னை 96-வது வட்டம்

என்.எல்.கே. நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு புதூர்—அசோக் நகரில் ; தலைவர் ; கே. எஸ். டி. சாரங்கன் ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், மேயர் அபிபுல்லா பேக், துணை மேயர் பவளவண்ணன், எம். கோபால் எம்.எல்.ஏ., ஏ. எஸ். இராமன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., மா. செங்குட்டுவன், மற்றும் பலர்.

பத்தநல்லூர்

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு ஆர். சின்னத்தம்பி அவர்களுக்கு சைக்கிள் பரிசளிப்பு : கடை வீதியில் ; தலைவர் : கே. ஏ. அமிர்ஒலி ; பேசுவோர் : என். எஸ். இளங்கோ, பொன். தருமன், என். அசோகன், பி.ஏ. லிங்கன், கே. கே. குஞ்சிதபாதம்.

கலைவாணர் உருவச் சிலை திறப்பு விழா

அமைச்சர் கருணாநிதி பங்கேற்பு

20—3—68 மாலை 6 மணிக்கு சென்னை அடையாறு—கோட்டூர் கலைவாணர் என். எஸ். கே. நினைவு மன்ற 7-வது ஆண்டு விழாவும்—கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் உருவச் சிலைத் திறப்பு விழாவும், கோட்டூர் பெருமான் வீதியில் நடைபெறும் ; தலைவர் : மு. வெ. சிவஞானம் எம். எல். ஏ. ; முன்னிலை : கூட்டுறவுச் செல்வர் கே. ஆர். இராமசாமி ; சிலைத் திறப்பாளர் : அமைச்சர் மு. கருணாநிதி ; பேசுவோர் : என். வி. நடராசன் எம். எல். சி., சீனிவாசன், அரங்கண்ணல் எம். எல். ஏ., முரசொலி மாறன் எம். பி., துணை மேயர் பவளவண்ணன், டி. கே. கபாலி எம். சி., எம். கோபால் எம். எல். ஏ., முன்னாள் மேயர் மைனர் மோசன், சைதை சம்பந்தம் எம். சி., ஆர். டி. பார்த்தசாரதி எம். சி., அ. சின்னசாமி.

முருகுபாண்டியன்

கல்வி நிகழ்ச்சிகள்

மார்ச் 20 : காய்கேயம் ; 22 : பிலாத்து ; 23 : குரியம்பாளையம் ; 24 : உறையூர் ; 25 : திருவெறும்பூர் ; 26 : குருவாரெட்டியூர் ; 27 : பூஞ்சேரி ; 28 : அம்மாபேட்டை : 29 : கோனேரிப்பட்டி ; 30 : குமாரபாளையம் : 31 : திருவரங்கம்.

நிர்வாகிகள் முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. ஏ.ஏ. ரெஜினால்டு, எம்.பி., அவர்களால் ஆயிரகாலப் பெரியதெரு, ராயபுரம், அரசியலாலயம் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஒயிலாசாரன் செட்டித் தெரு, சென்னை.13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

காங்கிரசுப் பொம்மலாட்டம்

தன் வினை தன்னைச் சுடுகிறது

பீகார் அமைச்சரவை கவிழ்ந்தது !

பாட்னா முதல் பாண்டிச்சேரி வரை, காங்கிரசு அமைச்சரவைகளின் வீழ்ச்சி மிக வேகமாக நடைபெறத் தொடங்கி விட்டது !

பீகாரில் 47 நாட்கள் அமைச்சரவையின் ஈற்காலினை அலங்கரித்துக் கொண்டுவந்த சோஷித் தன அமைச்சரவை நேற்று வீழ்ந்து விட்டது ! அமைச்சரவையை எதிர்த்துக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்று, வாக்கெடுப்பின்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 165 உறுப்பினர்களும் எதிராக 148 உறுப்பினர்களும் வாக்களித்தனர்—அமைச்சரவை கவிழ்ந்தது ! பீகார் மண்டலத்தை 47 நாட்கள் ஆண்ட பி. பி. மண்டல், நாற்காலியையிட்டு இறக்கப்பட்டுவிட்டார் !

காங்கிரசு வளர்த்த 'கைப்பொம்மை' அமைச்சரவைகளில் ஒன்றாக இருந்த பீகார் அமைச்சரவை வீழ்ந்தது ! காங்கிரசால் ஆதரிக்கப்பட்ட மண்டல் அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்குக் காங்கிரசின் முன்னாள் முதலமைச்சர் பி. என். ஜா அவர்களே முன்னின்று பாடுபட்டுள்ளார் ! காங்கிரசிலின்றும் வெளியேறியவர்கள் புதிய கட்சி அமைத்துள்ளனர் !

'தீனி விதைத்தவன் தினை அறுப்பான் ; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று கூறுவதுபோல், காங்கிரசுக் கட்சி ஆரம்பித்து—கையாண்டு வந்த வித்தை அதன்மீதே திரும்பிவிட்டது !

எதிர்க் கட்சிகளைக் கிலிப்படுத்—கட்சிவிட்டுக் கட்சி பாயச்செய்வது—ஆசைகாட்டி ஆட்சியை இழுப்பது—எதிர்க் கட்சி அமைச்சரவைகளைக் கவிழ்க்க எத்தகைய மாயதந்திரத்தை வேண்டுமானலும் செய்வது—இவையெல்லாம், காங்கிரசுக் கட்சியினர் துணிந்து செய்தனர் ! அந்த வித்தை அவர்களுக்கே ஆபத்தை கொண்டுவருகிறது !

1967 பொதுத் தேர்தலுக்குப் பின் பீகார் மாநிலத்தில் காங்கிரசு சிறுபான்மைக் கட்சியாக ஆகிவிட்டது ; எதிர்க் கட்சிகளின் கூட்டணி அமைச்சரவை, மகாமாய பிரசாதின்கா என்பவரின் தலைமையில் 1967 மார்ச் 5-ம் தேதி அமைந்தது ; அப்பொழுது, 318 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டமன்றத்தில், கூட்டணிக்கு ஆதரவாக 172 உறுப்பினர்களும், காங்கிரசுக் கட்சிக்கும் அதன் ஆதரவு அமைப்புக்கும் 146 பேர்களும் இருந்தனர் ; இந்த அமைச்சரவை, பத்து மாதங்கள் நீடித்தபிறகுதான்.

கூட்டணியில் அமைச்சராக இருந்த பி. பி. மண்டல் என்பவர், கூட்டணியைவிட்டு விலகி—20 உறுப்பினர்களை வெளியேற்றி—'சோஷித் தளம்' என்ற புதுக் கட்சியை உருவாக்கி—காங்கிரசுக் கட்சியின் ஆதரவுடன் 1968 சனவரி 25-ம் நாள் கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்த்தார் ; பின்பு கவர்னர் தயவினால் மேலவை உறுப்பினராகி, முதலமைச்சராகப் பதவியேற்றார் ! காங்கிரசுக் கட்சி அவரை ஆதரித்தது !

இப்பொழுது, காங்கிரசுக் கட்சிவிருந்து பதினேந்து பேர் வெளியேறி, 'காங்கிரசின் கைப் பாவை' அமைச்சரவையைக் கவிழ்த்து விட்டனர் !

எதிர்க் கட்சிகளின் அமைச்சரவை, விரைவில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது !

பஞ்சாபில் நெருக்கடி !

கவர்னர்--அவைத் தலைவர் மோதல்

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு புதிய அரசியல் நெருக்கடி உருவாகியுள்ளது !

பஞ்சாப் சட்டமன்றம், இரண்டு மாதங்களுக்கு ஒத்திப் போடப்பட்டதாக மார்ச் 7-ம் நாள், சட்டமன்ற அவைத் தலைவர் ஜோகிந்தர் சிங் மான் தெரிவித்திருந்தார்.

அதற்குப்பின், சட்டமன்றக் கூட்டத்தைக் கலைத்துவிட்டு, மீண்டும் மார்ச் 18-ம் நாள், சட்டமன்றத்தைக் கூட்டுவதாகப் பஞ்சாப் கவர்னர் அறிவித்தார்.

நேற்றையத்தினம் பஞ்சாப் சட்டமன்றம் கூடிய பிறகு, மூன்று மணி நேரம் அரசியல் சட்ட நுணுக்கங்கள் பற்றியும், சட்டமன்றத் தலைவர்—கவர்னர் அதிகாரங்கள் பற்றியும் விவாதம் நடத்திய பின்னர், சட்டமன்றத்தைக் கவர்னர் மீண்டும் கூட்டியது சரியல்லவென்றும், மார்ச் 7-ம் காளி லிருந்து இரண்டு மாதங்களுக்குச் சட்டமன்றத்தை ஒத்திப் போட்ட தமது உத்தரவு மட்டுமே செல்லத்தக்கது என்றும் சட்டமன்றத் தலைவர் மான அறிவித்தார் ; அத்துடன் சட்ட மன்றக் கூட்டத்தை முடித்துவிட்டதாகக் கூறிச் சென்று விட்டார்.

அதற்குப்பின், சட்டமன்றத் தலைவர் தலைமையில் அவை கூடி, வரவு—செலவுத் திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

தமது அனுமதியின்றி கூடிய கூட்டம் செல்லத்தக்கதல்ல என்று சட்டமன்றத் தலைவர் கூறியிருப்பதாவது :

"முறையான சட்டமன்றம் கூடாததால், வரவு—செலவுத் திட்டம் நிறைவேறியதாகக் கருதப்படமாட்டாது" என்று எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர்.

அரசியல் நெருக்கடி பஞ்சாபில் மூண்டுள்ளது ! கவர்னருக்குள்ள அதிகாரம்—சட்டமன்றத் தலைவருக்குள்ள அதிகாரம் பற்றிய விவாதம் ஆரம்பமாகியிருக்கிறது !

இத்தகைய நெருக்கடிகளை ஆரம்பித்து வைத்தது, மேற்கு வங்காளத்தின் கவர்னர் தர்ம வீரா என்பவர்தான் ! அவர் ஆரம்பித்துவைத்த சிக்கல், மாறிமாறித்துக்கு மாறிலம் தாவிக் கொண்டிருக்கிறது !

மா சே-துங் மீது உரிமைப்பிரச்சினை

கேரள சட்டமன்றத்தில் வலதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் முயற்சி

கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடுவை. 'திரிபுவாதி' எனவும், 'அமெரிக்க ஏஜெண்டு' என்றும் தாக்கி பீகில் வாஞெலி பிரச்சாரம் செய்துவருவதுபற்றிக் கேரள சட்டமன்றத்தில், காங்கிரசு உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அதுவே இறுதியில், மா சே-துங்மீது உரிமைப் பிரச்சினை ஒன்று எழுப்பும் அளவுக்கு வளர்ந்தது !

பீகில் ரேடியோ பிரச்சாரத்தைக் குறிப்பிட்ட கேள்விக்கு 'ஆம்' என்று ஒரே வார்த்தையில் முதலமைச்சருக்காகப் பதிலளித்த ரெவினியூ அமைச்சர் கெளரி தாமல், 'பீகில் வாஞெலி'யின் பிரச்சாரத்தின், தாம் நேரடியாகக் கேட்கவில்லையென்றும், அதுபற்றி வெளிவந்த பத்திரிகைச் செய்திகளை மட்டுமே படித்ததாகவும் கூறினர்.

"நம்பூதிரிபாடு உண்மையிலேயே பீகில் ஏஜெண்டு ; அதை மறைப்பதற்காக—கண்துடைப்புக்காக அவரை, 'அமெரிக்க ஏஜெண்டு' என்று பீகில் பிரச்சாரம் செய்கிறதா ?"

என்று மீண்டும் கருணாகரன் என்ற காங்கிரசு உறுப்பினர் கேட்டபோது,

"அது உறுப்பினரின் கட்சி கடைபிடிக்கும் தந்நிலமாக இருக்கலாம் ; சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருப்பது காங்கிரசுதான்"

என்று அமைச்சர் கெளரி தாமல் பதிலளித்தார்.

"மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இதுபோன்ற பிகில் பிரச்சாரத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும்படி கேரள அரசு கேட்டுக்கொள்ளுமா ?"

என்று மற்றொரு உறுப்பினர் கேட்டபோது, அமைச்சர் கெளரி தாமல்,

"நம்பூதிரிபாடுவை, 'ஒரு நிர்வாதி' என்றுதான் பிகில் வாஞெலி கூறுகிறதே தவிர, 'அமெரிக்க ஏஜெண்டு' எனக் கூறுவதாகத் தெரியவில்லை"

என்றார்.

கடைசியாக, இந்த விவாதங்களுக்குப் பிறகு வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் எழுந்து,

"எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த அளவுக்கு அலைக்கழித்திருக்கும் இந்தப் பிரச்சினையின் தொடர்பாக, இந்த மன்றத்தில், மா சே-துங்மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்படுமா ?"

என்று கேட்டபோது, அவைத் தலைவர், அதற்கு அனுமதியளிக்க மறுத்தார்.

கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள்

சென்னை க்கீர் கழகம்—திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில் இவ்வாண்டு வித்துவான் நிலை நிலை—முதனிலை—தமிழ் எம்.ஏ. தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்குரிய முக்கியப் படப் பகுதிகளுக்கு விளக்கம் தரும் சேக்குடன், பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுத் தொடர் தொடக்க விழா (முதல் நாள்) 21—3—68 மாலை 6-15 மணிக்கு சென்னை மாகிலக் கல்லூரி தமிழ்த் துறை அறையில் நடைபெறும் ; திரு பெ. திருஞானசம்பந்தன் எம்.ஏ. எல்.டி. தலைமை தாங்குவார் ; 'மொழி இலக்கிய வரலாறுகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

'விளக்குவார் எங்கள் தலைவர்'

சித்தன் (காங்.) :—"வணிக வரிச் சிக்கலைப் பற்றிய லோகநுதன் குழுவின் அறிக்கையை, இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் ; நன்செய்க்கும் நில வரியை ரத்துச் செய்யவேண்டும்."

முதலமைச்சர் அண்ணா :—"தண்ணீரத் தீர்வையைத் திருத்தி விட்டு நில வரியை நீக்கலாம்—என்று கெய்வார் அறிக்கை கூறுகிறது ; இதுபற்றி உறுப்பினர் என்ன கருதுகிறார் ?"

சித்தன் (காங்.):—"இதுபற்றி விளக்கமாகப் பதில் கூறவேண்டும் ; இதை எங்கள் தலைவர் பேசுமபோது கூறுவார்."

(சிரிப்பு)

—18—3—68 மாலேப் பத்திரிகைச் செய்தி

விளக்கினர் அந்தத் தலைவர் !

"நில வரி ரத்து பற்றிய கெய்வார் அறிக்கையிது சுதந்தரா உறுப்பினர் டி. எஸ். ஆதிமூலம் தெரிவித்த கருத்துக்கள், எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமறும் ஆமோதித்துப் பேசினர்."

—'இந்து' (19—3—68) செய்தி

திருவள்ளுவர் 2000-ஆவது பிறந்த நாள்

தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, மார்ச் 18—திருவள்ளுவரின் 2000—ஆவது பிறந்த நாள் விழாவை 1969 ஜனவரியில் (தைத் திங்கள் 4-ம் நாள்) சென்னைத் தமிழக அரசு ஏற்பாடுசெய்துவருகிறது. அன்று பொது விடுமுறை அளிக்கப்படும் என்றும் தெரிகிறது.